கூட்டம் எண். 23 | செங்கல்பட்டு நகராட்சி
நாள்.21.07.2025

குறள் : அன்றறிவாம் என்னாது அறஞ்செய்க மற்றது
பொன்றுங்கால் பொன்றாத் துணை

தெளிவுரை: பின்னால் பார்த்துக் கொள்ளலாம் என்று எண்ணாமல் அறத்தை நாள்தோறும் செய்க. அதுவே உடம்பிலிருந்து உயிர் நீங்கும் காலத்து அழியாத துணையாகும்.

## அவசரக் கூட்டம்

**2025–ஆம் ஆண்டு ஜூலை மாதம் 22 ஆம் தேதி (22.07.2025 ) செவ்வாய் கிழமை பிற்பகல் 12.00 மணிக்கு செங்கல்பட்டு நகராட்சி வேதாசலம் கட்டிடத்தில் அவசரக் கூட்டம் நகரமன்ற தலைவர் திருமதி.தேன்மொழி நரேந்திரன் அவர்கள் தலைமையில் நடைபெறும். அது சமயம் துணைதலைவர் மற்றும் நகரமன்ற உறுப்பினர்கள் அனைவரும் தவறாது கலந்துக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள்.**

21/07/2025
நகரமன்ற தலைவர்
செங்கல்பட்டு நகராட்சி

**பொருள் எண்.1**

செங்கல்பட்டு நகராட்சி அக்டோபர் 1896-ல் அமைக்கப்பட்டது. சொத்துக்கள் மீதான வரியிலிருந்து வருமானம் முக்கியமாகப் பெறப்படுகிறது. அக்டோபர் 1947 முதல் நகராட்சி மூன்றாம் நிலை நகராட்சியாக வகைப்படுத்தப்பட்டது. பின்னர் இது முறையே 4-4-72 மற்றும் 17-4-84 அன்று தரம் II மற்றும் தரம் 1 என தரம் உயர்த்தப்பட்டது.

செங்கல்பட்டு மாவட்டம், செங்கை அண்ணா மாவட்டம், செங்கை எம்ஜிஆர் மாவட்டம், காஞ்சிபுரம் மாவட்டம் என பல்வேறு பெயர்களில் மாவட்ட பெயர் மாறிய நிலையில் தற்போது மீண்டும் 29.11.2019 முதல் செங்கல்பட்டு மாவட்டத்தின் தலைநகரமாக செங்கல்பட்டு நகரம் செயல்பட்டு வருகிறது.

1998 ஆம் ஆண்டு தமிழ்நாடு நகர்ப்புர உள்ளாட்சி அமைப்புகள் சட்டம் (தமிழ்நாடு சட்டம் 9/1999 பிரிவு) 3(1)b இன் கீழ் நகராட்சி மன்றங்களை உருவாக்கவும், அவ்வாறு உருவாக்கப்பட்ட நகராட்சி மன்றங்களை செம்மையான நிர்வாகத்திற்கென அவற்றை பிரிவு 3 (4) இன் கீழ் நிர்ணயிக்கப்பட்ட தகுதிகளின் (Norms) அடிப்படையில் பல நிலைகளாக வகைப்படுத்தவும் வகை செய்யப்பட்டுள்ளது. மேலும் 2023 ஆம் ஆண்டு தமிழ்நாடு நகர்ப்புர உள்ளாட்சி அமைப்பு விதிகளின் விதி 3(1)b- இல் நகராட்சி மன்றங்களை பின்வருமாறு தரவரிசை வகைப்படுத்தவும் வகை செய்யப்பட்டுள்ளது.

| வ. எண் | நகராட்சி மன்றங்களின் தரம் | தொடர்ந்து மூன்றாண்டுகளுக்கு ஆண்டு வருவாய் |
|---|---|---|
| 1 | சிறப்பு நிலை | ரூபாய் 15 கோடிக்கு மேல் |
| | தேர்வு நிலை | ரூ. 9 கோடிக்கு மேல் 15 கோடி வரை |
| | முதல் நிலை | ரூபாய் 6 கோடிக்கு மேல் 9 கோடி வரை |
| | இரண்டாம் நிலை | ரூபாய் 6 கோடிக்கு மிகாமல் |

| **வ. எண்** | **நகராட்சியின் பெயர்** | **மாவட்டம்** | **நகராட்சியின் தற்போதைய தர நிலை** | **தணிக்கை செய்யப்பட்ட ஆண்டு வருமானம் ரூபாய் கோடியில்** | | | |
|---|---|---|---|---|---|---|---|
| | | | | **2020 - 21** | **2021 - 22** | **2022 - 23** | **மூன்றாண்டு சராசரி வருமானம்** |
| 1 | செங்கல்பட்டு | செங்கல்பட்டு | முதல் நிலை | **20.5** | **16.41** | **27.55** | **21.49** |

நகராட்சி வருவாய் கேட்ப நகராட்சிகளை தரம் உயர்த்த தமிழ் நாடு நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகள் சட்டம் தமிழ்நாடு சட்டம் ஒன்பது பார் **1999** பிரிவு **3 (1)** பி–ன் கீழ் பிரிவு 3 (4) நிர்ணயிக்கப்பட்ட தகுதிகளின் அடிப்படையில் இந்நகராட்சியை தரம் உயர்த்த தமிழ்நாடு அரசிற்கும் நகராட்சி நிர்வாகம்

மற்றும் குடிநீர் வழங்கல் துறைக்கும் பரிந்துரை அனுப்பி வைக்க மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு–**

மன்றம் அனுமதி வழங்கலாம்.

**தீர்மான எண்.221, நாள்.22.07.2025**

அலுவலக குறிப்பு அனுமதி அளிக்கப்பட்டது.

**பொருள் எண்.2**

நகராட்சிக்கு சொந்தமான பழுதடைந்த நிலையில் உள்ள பழைய அறிஞர் அண்ணா பேருந்து நிலையத்தினை (புதிய பேருந்து நிலையம்) இடித்து அப்புறப்படுத்திவிட்டு தரைதளத்தில் நகர பேருந்து நிலையம் மற்றும் வணிக வளாக கட்டிடங்களும், முதல் தளத்தில் இருசக்கர வாகனம் நிறுத்துமிடம் அமைத்திடவும் ஏதுவாக கலைஞர் நகர்புற மேம்பாட்டு திட்டம் (KNMT - 2025–26)–ன் கீழ் ரூ.9.50 கோடி அனுமதிக்கப்பட்டு அதற்கான ஒப்பந்தப்புள்ளிகளும் பெறப்பட்டுள்ளது. ஆகவே மேற்படி பழைய பேருந்து நிலைய கட்டிடத்தை இடித்து அப்புறப்படுத்திட மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**<u>அலுவலக குறிப்பு</u>**

மன்றம் அனுமதி வழங்கலாம்

**தீர்மான எண்.222, நாள்.22.07.2025**

அலுவலக குறிப்பு அனுமதி அளிக்கப்பட்டது.

**பொருள் எண்.3**

செங்கல்பட்டு நகராட்சிக்குட்பட்ட 33 வார்டுகளில் கொசுபுழு ஒழிப்பு பணியினை மேற்கொள்ள போதிய நிரந்தர பணியாளர்கள் இல்லாத காரணத்தால் M/s.AMR Electrical Engineering Contractor வேலூர் என்ற தனியார் நிறுவனத்தின் மூலம் DBC பணியாளர்களை வெளிகொணர்வு முறையில் (Out Sourcing) பணியமர்த்தி பணி நடைப்பெற்று வருகிறது. இதற்கு மன்ற தீர்மான எண்.12 நாள்.30.04.2025–ல் நிர்வாக அனுமதியும் பெறப்பட்டுள்ளது. மேற்படி ஒப்பந்தாரரின் பணிக்காலம் வரும் 31.08.2025 உடன் முடிவடைவதால் வரும் பருவமழை காலங்களில் இந்நகராட்சி பகுதிகளில் டெங்கு நோய் தடுப்பு பணிகள் மேற்கொள்வதற்கு DBC பணியாளர்கள் தேவைப்படுகிறது. மேலும் 01.09.2025 முதல் 30.11.2025 வரை 78 நாட்களுக்கு இப்பணியினை ஏற்கனவே பணி மேற்கொண்டு வரும் M/s.AMR Electrical Engineering Contractor அவர்களுக்கு மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்களின் பழைய தினகூலி விலை விகிதத்தில் பணி நீட்டிப்பு செய்து கொள்வதற்கு ஆகும் உத்தேச செலவினம் ரூ.27.00 இலட்சத்திற்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

(ந.க.எண்.1574/2020/எச்1)

**அலுவலக குறிப்பு**:-

1. பொது சுகாதார பணியின் அவசர அவசியம் கருதி **01.09.2025** முதல் **30.11.2025** வரை 3 மாத காலங்களுக்கு M/s.AMR Electrical Engineering Contractor நிறுவனத்தின் மூலம் தற்போது பணி மேற்கொண்டு வரும் அதே விலைப்புள்ளி விகிதத்தில் பணி மேற்கொள்வதற்கு மன்றம் ஏற்கலாம்.
2. மன்றம் அனுமதிக்கலாம்.

**தீர்மான எண்.223, நாள்.22.07.2025**

அலுவலக குறிப்பு 1 மற்றும் 2 அனுமதி அளிக்கப்பட்டது.

**பொருள் எண்.4**

செங்கல்பட்டு நகராட்சியில், தமிழ்நாடு முதலமைச்சரின் காலை உணவு திட்டம் நகராட்சி பள்ளிகளில், ஏற்கனவே செயல்படுத்தப்பட்டு வருகிறது.

இந்நிலையில் தமிழ்நாடு அரசாங்கம், மாணவர்களுக்கு மிகவும் பயனுள்ள காலை உணவு திட்டத்தினை மேலும், கூடுதலாக அரசு உதவி பெறும் பள்ளிகளிலும் பயிலும் மாணவர்கள் பயன் பெறும் வகையில் நடைமுறைப்படுத்திட தீர்மானிக்கப்பட்டு உள்ளது.

ஏற்கனவே மூன்று நகராட்சி பள்ளிகளில் மட்டுமே செயல்படுத்தப்பட்டு வந்த இந்த திட்டம் தற்போது 7 அரசு உதவி பெறும் பள்ளிகளுக்கு விரிவு படுத்தப்பட்டு உள்ளதால், ஏற்கனவே 44 மாணவர்கள் பயன் பெற்ற நிலையில், தற்போது அரசு உதவி பெறும் பள்ளிகளை இணைத்துள்ளதால் 1409 மாணவர்களையும் சேர்த்து 1426 பள்ளி மாணவர்கள் பயன் பெற உள்ளனர்.

எனவே மிகவும் கூடுதல் எண்ணிக்கையிலான மாணவர்கள் இத்திட்டத்தில் பயன்பெற உள்ளதால் Common Kitchen-ல் கூடுதலாக சில வசதிகள் செய்து தர வேண்டி உள்ளது.

**அவை பின்வருமாறு:--**

1. குரங்குகள் விலங்குகள் உட்புகா வண்ணம் வெல்டு மெஷ் என்ற அமைப்பினை ஏற்படுத்திட வேண்டி உள்ளது.
2. கழிப்பறைகளை பழுது நீக்கம் செய்திட வேண்டி உள்ளது.
3. RO Plant புதுப்பிக்கப்பட வேண்டும்.

4. சிலிண்டர் வைப்பதற்கான பாதுகாப்பு அமைத்து, Gril Gate–ம் கூடுதலாக அமைக்கப்பட வேண்டும்.
5. LED விளக்குகள் பொருத்தப்பட வேண்டும்.
6. கூடுதலாக இரண்டு மின் விசிறிகள் பொருத்தப்பட வேண்டும்.
7. சுற்றுச்சுவர்கள் உடைந்து உள்ளதால் பாதுகாப்பு கருதி சுமார் 12 மீட்டர் அளவிற்கு இரும்பு கம்பி வேலி அமைத்திட வேண்டும்.
8. கழிவு நீர் வெளியேற வசதி ஏற்படுத்திட வேண்டும்.

அவசர அவசியம் கருதி மேற்குறிப்பிட்ட ஏற்பாடுகளை செய்து தர நடவடிக்கையினை மேற்கொள்ள தோராய செலவினம் ரூ.5.00 இலட்சத்திற்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு–**

1. மன்றம் அனுமதி வழங்கலாம்
2. மேற்படி பணியினை நகராட்சி பொது நிதியில் இருந்து மேற்கொள்ள மன்றம் ஒப்புதல் அளிக்கலாம்.

**தீர்மான எண்.224, நாள்.22.07.2025**

அலுவலக குறிப்பு 1 மற்றும் 2 அனுமதி அளிக்கப்பட்டது.

**பொருள் எண்.5**

செங்கல்பட்டு நகராட்சி முதல் நிலை நகராட்சியாகவும், மாவட்டத் தலைநகராகவும் விளங்கப்படுகிறது. இங்கு 33 வார்டுகள் உள்ளன. வீடுகள் 17,514 வீடுகளும், 70,056 என்ற அளவில் மக்கள் தொகையும் உள்ளது.

இங்கு தினசரி 21.02 MT என்ற அளவில் திடக்கழிவுகள் உருவாகிறது. இந்நகராட்சியின் பணியாளர் 63 என்றும், வெளிக்கொணர்வு முறையில் பணிபுரியும் பணியாளர்களின் எண்ணிக்கை 106 – என்று உள்ளது. திடக்கழிவு மேலாண்மை பணிகளுக்கு பயன்படுத்தப்படும் வாகனங்களின் எண்ணிக்கை.

| வ.எண் | வாகன வகை | நகராட்சி | வெளிக்கொணர்வு நிறுவனம் |
|---|---|---|---|
| 1 | பேட்டரி வாகனம் | – | 27 |
| 2 | இலகுரக வாகனம் LCV | 5 | 11 |
| | கனரக வாகனங்கள் | | |

| | | | |
|---|---|---|---|
| 3 | ஈச்சர் வகை டிப்பர் லாரி | – | 1 |
| 4 | 407 வகை டிப்பர் லாரி | 1 | – |
| 5 | பாப்காட் (Mini JCB) | 1 | – |
| 6 | JCB | 1 | – |
| 7 | டிராக்டர் | – | 1 |
| 8 | காம்பேக்டர் | – | 1 |
| 9 | நாய் பிடிக்கும் வாகனம் | 1 | – |
| 10 | கொசு மருந்து புகை வாகனம் | 1 | – |

மொத்தத்தில் 10 வாகனங்கள் நமது நகராட்சியால் தற்போது இயக்கப்படுகின்றன.

நம் நகராட்சி பொது சுகாதார பிரிவில் 3 நிரந்தர வாகன ஓட்டுனர்கள் மட்டுமே உள்ளன. அந்த வாகன ஓட்டுநர்களில் இரண்டு பேர் மட்டுமே பொது சுகாதார பிரிவில் பணி புரிகின்றனர். மற்றொரு வாகன ஓட்டுநர் மாற்றுப்பணி அடிப்படையில் பொறியியல் பிரிவில் குடிநீர் விநியோகப் பிரிவில் பணிபுரிகின்றார்.

தற்சமயம் நமது நகராட்சியில் உள்ள 10 வாகனங்களை இயக்குவதற்கு போதுமான ஓட்டுனர்கள் இல்லை, இதனால் பொது சுகாதார பணிகள் பாதிக்கப்படுகின்றது. இலகுரக வாகனங்கள் மற்றும் கனரகவாகனங்களை முறையாக பயிற்சி பெற்று, உரிமம் பெற்றவர்களைக் கொண்டு தான் இயக்கவேண்டும். அவ்வாறில்லாமல், இயக்கினால் நடை முறைச் சிக்கல்கள் ஏற்படுகிறது. எனவே மேற்குறிப்பிட்ட நகராட்சி வாகனங்களை (இலகுரக மற்றும் கனரக வாகனங்களை) இயக்கிட தேவையான ஓட்டுனர்களை, வெளிக்கொணர்வு முறையில் குறைந்த ஒப்பந்தப்புள்ளி கோரும் தனியார் நிறுவனத்தின் மூலம் நியமித்து ஒரு வருடத்திற்கான பணி மேற்கொள்ள தேவையான நடவடிக்கைகளை மேற்கொள்ள தோராய செலவினம் ரூ.20.00 இலட்சத்திற்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு–**

1. மன்றம் அனுமதி வழங்கலாம்
2. மேற்படி பணியினை நகராட்சி பொது நிதியில் இருந்து மேற்கொள்ள மன்றம் ஒப்புதல் அளிக்கலாம்.

**தீர்மான எண்.225, நாள்.22.07.2025**

அலுவலக குறிப்பு 1 மற்றும் 2 அனுமதி அளிக்கப்பட்டது.

**பொருள் எண்.6**

செங்கல்பட்டு நகராட்சி எல்லைக்குட்பட்ட வார்டு எண்.2ல் ஜே.சி.கே நகர், தென்றல் தெருவில் புதியதாக மழைநீர் வடிகால் மற்றும் சிறுபாலம் அமைத்து தருமாறு நகர்மன்ற உறுப்பினர் அவர்கள் மனு மூலம் கோரியுள்ளார். மேற்படி தெருவினை நகர்மன்ற தலைவர் அவர்கள், ஆணையாளர் மற்றும் பொறியாளர் ஆகியோர்கள் நேரடி ஆய்வு செய்து உத்திரவிட்டதன் அடிப்படையில் மழைநீர் வடிகால் மற்றும் சிறுபாலம் அமைக்கும் பணியினை தயாரிக்கப்பட்ட மதிப்பீடு ரூ.13.00 இலட்சத்திற்கு பொதுநிதியிலிருந்து மேற்கொள்ள மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு**

1. மன்றம் அனுமதி வழங்கலாம்
2. மேற்படி பணியினை நகராட்சி பொது நிதியில் இருந்து மேற்கொள்ள மன்றம் ஒப்புதல் அளிக்கலாம்.

**தீர்மான எண்.226, நாள்.22.07.2025**

அலுவலக குறிப்பு 1 மற்றும் 2 அனுமதி அளிக்கப்பட்டது.

**பொருள் எண்.7**

செங்கல்பட்டு நகராட்சி எல்லைக்குட்பட்ட வார்டு எண்.2ல் ஜே.சி.கே நகர், நிலா தெருவில் புதியதாக மழைநீர் வடிகால் மற்றும் சிறுபாலம் அமைத்து தருமாறு நகர்மன்ற உறுப்பினர் அவர்கள் மனு மூலம் கோரியுள்ளார். மேற்படி தெருவினை நகர்மன்ற தலைவர் அவர்கள், ஆணையாளர் மற்றும் பொறியாளர் ஆகியோர்கள் நேரடி ஆய்வு செய்து உத்திரவிட்டதன் அடிப்படையில் மழைநீர் வடிகால் மற்றும் சிறுபாலம் அமைக்கும் பணியினை தயாரிக்கப்பட்ட மதிப்பீடு ரூ.5.00 இலட்சத்திற்கு பொதுநிதியிலிருந்து மேற்கொள்ள மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு**

1. மன்றம் அனுமதி வழங்கலாம்
2. மேற்படி பணியினை நகராட்சி பொது நிதியில் இருந்து மேற்கொள்ள மன்றம் ஒப்புதல் அளிக்கலாம்.

**தீர்மான எண்.227, நாள்.22.07.2025**

அலுவலக குறிப்பு 1 மற்றும் 2 அனுமதி அளிக்கப்பட்டது.

**பொருள் எண்.8**

செங்கல்பட்டு நகராட்சி எல்லைக்குட்பட்ட வார்டு எண்.2ல் ஜே.சி.கே நகர், முல்லை தெருவில் புதியதாக மழைநீர் வடிகால் மற்றும் சிறுபாலம் அமைத்து தருமாறு நகர்மன்ற உறுப்பினர் அவர்கள் மனு மூலம் கோரியுள்ளார். மேற்படி தெருவினை நகர்மன்ற தலைவர் அவர்கள்,

ஆணையாளர் மற்றும் பொறியாளர் ஆகியோர்கள் நேரடி ஆய்வு செய்து உத்திரவிட்டதன் அடிப்படையில் மழைநீர் வடிகால் மற்றும் சிறுபாலம் அமைக்கும் பணியினை தயாரிக்கப்பட்ட மதிப்பீடு ரூ.5.00 இலட்சத்திற்கு பொதுநிதியிலிருந்து மேற்கொள்ள மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**<u>அலுவலக குறிப்பு</u>**

1. மன்றம் அனுமதி வழங்கலாம்
2. மேற்படி பணியினை நகராட்சி பொது நிதியில் இருந்து மேற்கொள்ள மன்றம் ஒப்புதல் அளிக்கலாம்.

**தீர்மான எண்.228 நாள்.22.07.2025**

அலுவலக குறிப்பு 1 மற்றும் 2 அனுமதி அளிக்கப்பட்டது.

**பொருள் எண்.9**

செங்கல்பட்டு நகராட்சி எல்லைக்குட்பட்ட வார்டு எண்.31ல் பழைய GST சாலையில் இருந்து GST சாலை வரையிலும் புதியதாக மழைநீர் வடிகால் அமைத்து தருமாறு நகர்மன்ற உறுப்பினர் அவர்கள் மனு மூலம் கோரியுள்ளார். மேற்படி சாலையினை நகர்மன்ற தலைவர் அவர்கள், ஆணையாளர் மற்றும் பொறியாளர் ஆகியோர்கள் நேரடி ஆய்வு செய்து உத்திரவிட்டதன் அடிப்படையில் மழைநீர் வடிகால் அமைக்கும் பணியினை தயாரிக்கப்பட்ட மதிப்பீடு ரூ.15.00 இலட்சத்திற்கு பொது நிதியிலிருந்து மேற்கொள்ள மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**<u>அலுவலக குறிப்பு</u>**

1. மன்றம் அனுமதி வழங்கலாம்
2. மேற்படி பணியினை நகராட்சி பொது நிதியில் இருந்து மேற்கொள்ள மன்றம் ஒப்புதல் அளிக்கலாம்.

**தீர்மான எண்.229, நாள்.22.07.2025**

அலுவலக குறிப்பு 1 மற்றும் 2 அனுமதி அளிக்கப்பட்டது.

**பொருள் எண்.10**

நகராட்சி அலுவலக பிரதான நுழைவு வாயில் பழுதடைந்துள்ள தூண்களை அப்புறப்படுத்தி வாயிற்கதவினை அகலப்படுத்தி அலங்காரத்துண்கள் மற்றும் பெயர்பலகை நிறுவிட தயாரிக்கப்பட்ட மதிப்பீடு ரூ.5.00 இலட்சத்திற்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**<u>அலுவலக குறிப்பு</u>**

1. மன்றம் அனுமதி வழங்கலாம்

2. மேற்படி செலவினத்தை பொது நிதியில் இருந்து செலவினம் மேற்கொள்ள மன்றம் ஒப்புதல் அளிக்கலாம்.

**தீர்மான எண்.230, நாள்.22.07.2025**

அலுவலக குறிப்பு 1 மற்றும் 2 அனுமதி அளிக்கப்பட்டது.

ந. தேன்மொழி 22.07.2025

நகரமன்ற தலைவர்
செங்கல்பட்டு நகராட்சி